## பொருளாதாரம் பகுதி - 6

## 6. வேளாண்மை

**பொருளாதாரத்தில் வேளாண்மையின் பங்கு**

இந்தியப் பொருளியலில் வேளாண்மையே பிழைப்பூட்டும் முதன்மையான அடிப்படை ஆதாரமாகும்.

**1. நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்களிப்பு**

- 1950 முதல் 1951 மற்றும் 1979-80 ம் ஆண்டுகளில் பல்வேறு வேளாண்மைப் பண்டங்கள் கால்நடை வளர்ப்பு (பராமரிப்பு) அத்துடன் தொடர்புடைய துணைச் செயல்பாடுகள் வாயிலாக நாட்டு வருமானத்தில் 40% க்கு அதிகமான வருமானம் கிடைத்தது.
- 1980- 1990 ஆண்டுகளில் இந்த விகிதத்தில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டது. 2002-03 ம் ஆண்டில் இது 25% ஆக இருந்தது.

**2. வாழ்க்கைக்கு ஒரு அடிப்படை ஆதாரம்**

- 10 நபர்களில் ஒவ்வொரு ஆறாம் நபரும் வேளாண்மையைச் சார்ந்து வாழுகின்றனர்.
- தொழிலில் வளர்ந்த நாடுகளாகிய இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்றவற்றில் இந்திய நாட்டுடன் ஒப்பிடும்போது வேளாண்மையைச் சார்ந்த மக்களின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது.
- 1921-2001 ஆகிய ஆண்டுகளில் வேளாண்மையைச் சார்ந்த உழைப்புச் சக்தியின் அளவானது இருமடங்கிற்கு அதிகமாகிவிட்டது.
- இத்துறையினை குறைவேலை வாய்ப்பு, மறைமுக வெலையின்மை, மற்றும் குறை உற்பத்தி வேலை வாய்ப்பு ஆகியன பெரும் தொல்லைக்குட்படுத்தியுள்ளது.

**3. வேலைவாய்ப்பளித்தல்**

- கிராமப்புறங்களில், வேளாண்ம சார்ந்த தொழில்களை 70% மக்கள் சார்ந்துள்ளனர்.
- 1995 ம் ஆண்டில் 97 மில்லியன் மக்கள் எண்ணிக்கையிலிருந்து 235 மில்லியனாக நிலத்தை சார்ந்த தொழிலில் ஈடுபடுவோரின் (விவசாயிகள் மற்றும் உழவர்கள்) எண்ணிக்கை அதிகரித்தது.

4. **தொழில்துறை முன்னேற்றம்**

- வேளாண்மை தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை வழங்குகிறது. பருத்தி மற்றும் சணல் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், வனஸ்பதி சோப்பு வகைகள் போன்றவை விவசாயத்தைச் சார்ந்த தொழில்களாகும்.
- சிறுதொழில்கள், கைத்தறி, பருத்தி ஆலைகளான நெசவாலைகள், நெல் (அரிசி) உமி நீக்கும் ஆலைகள், நார் மற்றும் காகித தொழில்கள் தங்களின் கச்சாப் பொருட்களுக்கும் வேளாண்மையைச் சார்ந்துள்ளன.

5. **பன்னாட்டு வாணிபம்**

- ஏற்றுமதியில் தேயிலை, எண்ணெய் பிண்ணாக்கு, கனி மற்றும் காய்கறி வகைகள், வாசனைப்பொருட்கள், புகையிலை, பருத்தி, காப்பி, சர்க்கரை, பதப்படாத கப்பளி மற்றும் தாவர எண்ணெய் போன்றவை குறிப்பிடத்தக்கவை.
- ஏற்றுமதி மூலம் நல்லதொரு பங்கைப் பெற்று தருவதோடு இறக்குமதியின் ஒரு முக்கியப் பிரிவாகவும் இது உள்ளது.
- வேளாண் துறையானது நிகர வெளிநாட்டு செலவாணியை ஈட்டித்து மூலதன ஆக்கத்திற்கும், விவசாயம் சாராத பிற தொழிலுக்கான இறக்குமதிக்கு வேளாண்மை பெரிதும் உதவுகிறது.

6. **முதலீட்டு ஆக்கமும் முதலீடும்**

- நாட்டின் முதலாக்கத்தில், உற்பத்தி சொத்தானது விவசாய சொத்துகளாகிய, நிலம், நீர்ப்பாசன வசதிகள், டிராக்டர்கள், உழவுக் கருவிகள், ஏர் அல்லது கலப்பை, ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் சரக்கு பாதுகாப்பு வசதிகள் போன்ற வடிவங்களில் உள்ளது.
- நாட்டு வருமனத்தில் 25% வேளாண்மை ஈட்டித்தருவதால் இத்துறையே சேமிப்பிற்கும் பொருளாதாரத்தின் முதலாக்கத்திற்கும் அடிப்படை மூலாதாரமாக விளங்குகிறது.

7. **உணவு மற்றும் வைக்கோல் (தீவனம்)**

- வேளாண்மையின் செழிப்பு நாட்டின் செழிப்பைக் குறிக்கும். வேளாண்பொருட்கள் வெளிநாட்டு வானிபத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. வேளாண்- வளர்ச்சி, வறுமை - ஒழிப்பு திட்டத்தில் ஒரு நேரிடை பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

**9. பன்னாட்டு - தரப்படுத்தலில் இடம் பெறுதல்**

நிலக்கடலை உற்பத்தியில் உலக அளவில் இந்திய முதல் இடத்தையும், அரிசி உற்பத்தியில் இரண்டாம் இடத்தையும், புகையிலை உற்பத்தியில் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.

- அறிஞர் ரேக்னர் நர்க்ஸ் என்பவரின் கூற்றுப்படி, உபரி (அதிக) மக்களை வேளாண்மையிலிருந்து பிரித்தெடுத்து அவர்களைப் புதிதாக ஆரம்பிக்கும் தொழிற்சாலைகளிலும் கிராமப் புறங்களில் செய்யப்படும் பொதுப் பணிகளிலும் வேலைக்கமர்த்துதல் வேண்டும். இவ்வாறாக செய்வதின் வாயிலாக விவசாயௌற்பத்தித்திறனை ஒருபுறம் அதிகரிப்பதோடு மறுபுறத்தில் சிறிய உபரி உழைப்பாளர்களுக்காக சிறிய புதிய தொழிலமைப்புகளையும் அமைத்துக்கொள்ளலாம்.

**பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு**

ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை அளிக்கும் 4 வகையான பங்குகளை சைமன் குஸ்நட் விளக்குகிறார்.

1. பொருட்களின் பங்களிப்பு (உணவு மற்றும் கச்சாப் பொருட்களை கிடைக்கச் செய்தல்)

2. அங்காடியின் பங்களிப்பு (விவசாயம் சாரா உற்பத்தி துறையில் உற்பத்தியாளர் பொருட்களுக்கும் நுகர்வு பொருட்களுக்கும் அங்காடியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. உற்பத்தி காரணிகளில் பங்களிப்பு (வேளாண் சாரா துறைக்கு உழைப்பையும் முதலையும் கிடைக்கச் செய்தல்)

4. அயல்நாட்டு வாணிபத்திற்கு பங்களிப்பு

**வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளுக்குமிடையே உள்ள தொடர்பு**

ஒரு நாடு வளர்ச்சியடையும் பாதையில் செல்லும் போது, வேளாண்மைக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்குமிடையே உள்ள ஒன்றோடொன்று- சார்ந்த நிலை தொடர்ச்சிகளால் (linkage) வலுப்படுத்தப்படுகிறது.

1. உற்பத்தி தொடர்ச்சி

2. தேவை தொடர்ச்சி

3. சேமிப்பு மற்றும் முதலீட்டு தொடர்ச்சி

**1. உற்பத்தி தொடர்ச்சி**

- இது வேளாண்மையும் தொழிலும் உற்பத்தி இடுபொருட்களாக ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதால் ஏற்படுகிறது.
- பருத்தி, சணல், கரும்பு போன்ற வேளாண் பொருட்களை வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு அளிப்பதன் வாயிலாகவும் இரசாயன் உரங்கள், இயந்திரங்கள் மற்றும் மின்சாரம் போன்ற தொழிலின் உற்பத்தியை வேளாண்மைத் துறைக்கு அளிப்பதாலும் கடந்த 50 ஆண்டுகளில் இத்தொடர்ச்சி வலுவாகிறது.
- இது வேளாண்மைத்துறை நவீனமாகுதலையும் பிரதிபலிக்கிறது.

**2. தேவை தொடர்ச்சி**

- இந்த இரண்டு துறைகளுக்கிடையே வெகு வலுவான தேவை தொடர்ச்சி உள்ளது.
- வருமானம் மற்றும் தொழில்மயமாகுதலின் விளைவானது, உணவு மற்றும் விவசாயக் கச்சாப்பொருட்களின் தேவையைப் பாதிக்கிறது.

**3.சேமிப்பு மற்றும் முதலீட்டில் தொடர்ச்சி**

கிராம வருமானம், தொழிற்சாலையின் நுகர்வு பொருட்களாகிய ஆடைகள், கால்மிதிகள், சர்க்கரை , சமையல் எண்ணெய், தொலைக்காட்சிப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்றவற்றில் ஏற்படுத்தும் பாதிப்புகள் இணையாக குறிப்பிடத்தக்கது.

**வேளாண்மை வளர்ச்சிக் கூறுகள்**

- வேளாண் உற்பத்தியின் பெருக்கமானது 2 விதங்களில் அதிகரிப்பு ஏற்படும்.
- 1. விவசாயம் செய்யக்கூடிய நிலப்பரப்பில் அதிகரிப்பு (கிடைமட்ட நீழ்ச்சி/ விரிவாக்கம்)
- 2. வேளாண்மை உற்பத்தி திறனில் அதிகரிப்பு (செங்குத்து நீழ்ச்சி/ விரிவாக்கம்)
- உற்பத்தித் திறன் இரண்டு கூறுகளை உடையது. அவை நில உற்பத்தித்திறன் மற்றும் உழைப்பின் உற்பத்தித்திறன்.

**இந்திய வேளாண்மையின் உற்பத்தித் திறன்**

- இந்திய விவசாய நாடாக இருப்பினும் அது பல பிரச்சினையின் நடுமையமாக உற்பத்தி குறைவும் உற்பத்தித் திறன் குறைவும் அமைந்துள்ளது.
- மற்ற நாடுகளை (இந்தியாவிற்கு ஒப்பாகவுள்ள இயற்கை சூழ்நிலைகளில் ) ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவின் உற்பத்திதிறன் மிகக் குறைவாகவே உள்ளது.

**வேளாண்மை பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணங்கள்**

1. மக்கட்தொகைப் பற்றிய காரணங்கள்
2. பொதுவான காரணங்கள்
3. நிறுவனம் சார்ந்த காரணங்கள்
4. தொழில்நுட்பக் காரணங்கள்

**1. மக்கட்தொகைப் பற்றிய காரணங்கள்**

- வேளாண்மையின் குறைந்த விளைச்சலுக்கான மிக முக்கிய காரணம் நிலத்தின் மீது மக்கள் தொகையினால் எற்படுகிற அளவுக்கதிகமான நெருக்கம் (அ) பாரச்சுமை.
- கூடுதல் உழைப்பாற்றலை தொழிற்துறை தன்னிடமாக ஈர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் தொழில்துறை வளர்ச்சி வீதமானது தேவையை விட மிகக் குறைவாக உள்ளது. இதன் விளைவாக அதிகரிக்கும் மக்கள்தொகை பிழைப்பிற்காக நிலத்தையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது.
- நில உடைமைகள் சிறு துண்டுகளாக்கப்பட்டு சிதறிப் போகின்றன. முன்னெற்றத்தின் பயிற்சி மற்றும் பணிகளின் அளிப்பு தேவைக்கு குறைவாகவே இருக்கின்றன.
- குறைந்த மற்றும் மறைமுக வேலையின்மை ஏற்படுகின்றது.

**2. பொதுவான காரணங்கள்**

**வேளாண்மையில் அதிகப்படியான தொழிலாளர்கள்**

- மிகக் குறைந்த உற்பத்தித் திறனுக்கான மிக முக்கிய காரணம் மக்கள் அதிக எண்ணிக்கையில் வேளாண் தொழிலில் குவிதல் ஆகும்.

**ஊக்கமற்ற கிராமப்புற சூழ்நிலை**

- இந்த உழவர்கள் பொதுவாக ஏழைகளாகவும், அறியாமை நிறந்தவர்களாகவும், மூடநம்பிக்கை கொண்டவர்களாகவும் பழமைவாதிகளாகவும், கல்வியறிவற்றவர்களாகவும், பழமையான பழக்கவழக்கங்களாலும், சாதிப்பாகுபாடு முறைகளாலும், கூட்டுக் குடும்ப பிணைப்புகளால் கட்டப்பட்டவர்களாகவும் இருந்து வருகின்றனர்.
- பழமையில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், தங்களது பழங்கால உழவு முறைகளிலேயே மனநிறைவு அடையும்படியாக கட்டிவைத்துள்ளது.
- புதிய தொழில்நுட்ப உற்பத்தி முறைகள் வேகமாக கடைபிடிக்கும் ஒரு சில உழவர்கள் தவிர்த்து பெரும்பாலான அதிகபட்ச உழவர்கள் பொருளாதார

முன்னேற்றங்களைப் பற்றி அறிந்துக் கொள்ளவும், பின்பற்றவும் ஊக்கமற்று காணப்படுகின்றனர்.

**வேளாண் துறை சார்பற்ற பணிகள் குறைவு**

- நிதி வசதி மற்றும் அங்காடி வசதிகள் போன்ற வேளாண்மை சார்பற்ற பணிகள் போதிய அளவில் கிடைக்கப் பெறாமை குறைவான உற்பத்தி திறனுக்கு காரணமாகும்.
- அங்காடி வசதியானது அதிக குறைபாடுகள் நிறைந்ததாகவும், அதிக செலவுகள் கொண்டதாகவும் காணப்படுகிறது.
- நவீன பண்டகசாலைகள் நம் நாட்டு பாணியிலேயே அமைக்கப்பட்டு, அவை போதுமானதாக இல்லை. தானியங்கள் சேமித்து வைக்கும் முறையானது குறைகள் நிறந்ததாகவும், அதிக செலவுகள் கொண்டதாகவும் காணப்படுகிறது.உழவர்களுக்கான கடன் வசதி இன்னும் வளர்ச்சியடையாமலே உள்ளது.
- உழவர்கள் முழுக்க முழுக்க நிறுவனம் சாராத தனியார் கடன் வழங்குவோர்களையே அவர்களின் அன்றாடத் தேவைகளுக்கு நம்பியுள்ளனர்.

3. **நிறுவனம் சார்ந்த காரணங்கள்**

**நில உடைமையின் அளவு**

- இந்தியாவில் சராசரி நில உடமையின் அளவானது மிகக் குறைவான அளவில் உள்ளது. 80% அளவு நிலவுடைமை 2 ஏக்கருக்குக் குறைவாகவே உள்ளது.

**குத்தகை அமைப்பு முறையின் குறைபாடுகள்**

- இந்தியாவில் காணப்படும் குத்தகை அமைப்பு மிகவும் ஊக்கமற்ற நிலையில் காணப்படுகிறது.
- இக்குத்தகை முறைகள் தமக்குள்ளேயே தேக்கநிலை ஏற்படுத்தக்கூடிய தன்மை வாய்ந்ததாக உள்ளது.
- இதன்முக்கிய இயல்பு இடை தரகர்களின் தலையீடு, நில உடைமையாளர்களின் சுரண்டல் போக்கு, துண்டுகள் ஆக்கப்பட்ட நிலங்கள், தொடர்ந்து அதிகரிக்கும் மக்கள் தொகையின் அழுத்தம் ஆகியனவாகும்

4. **தொழில்நுட்ப காரணங்கள்**

- ஏழ்மையான இடுபொருள்களும், முறைகளும்
- பற்றாக்குறையான பாசன வசதிகல்
- உழவர்கள் கடனில் மூழ்கிய நிலை
- போதுமான ஆராய்ச்சியின்மை

**குறை நீக்கும் வழிமுறைகள்**

1. நாட்டளவிலான கூட்டுறவு கூட்டு விவசாயமுறை துவங்கப்பட வேண்டும்.
2. மக்கட்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
3. தரமான உரவகைகள் கிடைக்கச் செய்தல்
4. உயர்தர விதைகளைப் பயன்படுத்துதல்
5. பாசன வசதிகளுக்கு மாற்று முறைகள் அமைத்தல்
6. நில உடைமைகளை ஒருங்கிணைத்தல்
7. விவசாயக் கடன் வசதியை அதிகரித்தல்
8. புறம்போக்கு மற்றும் மேய்ச்சல் நிலங்களை மேம்படையச் செய்தல்
9. புதிய கருவிகளை பயன்படுத்துதல்
10. மண் பாதுகாப்பு மற்றும் தீவிரமான சாகுபடி
11. அங்காடி அமைப்பில் முன்னேற்றம்
12. விவசாய ஆரய்ச்சிக்கும், பயிர் பாதுகாப்பிற்கும் ஊக்கம் அளித்தல்

**வேளாண்மைப் பயிர்களும், பயிர் வகைகளும்**

- பொருளாதார திட்டமிடல் 1950-51 ல் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பும், 1965 பசுமைப்புரட்சிக்குப் பின்பும், சாகுபடிக்கு கீழ் உள்ள நிலத்தின் அளவு மற்றும் ஒரு ஹெக்டேர் நிலத்தின் சராசரி உற்பத்தியும் தொடர்ந்து அதிகரித்தது. அதன் விளைவாக, அனைத்து வேளாண்மைப் பயிற்சிகளின் உற்பத்தியும் ஏறுமுகமாக இருக்கிறது.
- பசுமைப் புரட்சிக்கு முந்தைய காலத்தில் உணவு தானியங்களின் உற்பத்தியை விட பசுமைப்புரட்சிக்கு பிந்தைய காலத்தில் உணவு தானியங்களின் உற்பத்தி உயர்ந்தது.
- இந்தியாவில் காணப்படும் குத்தகை அமைப்பு மிகவும் ஊக்கமற்ற நிலையில் காணப்படுகிறது.

**இந்தியாவில் பயிர் வகைகள்(cropping Pattern)**

- ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில், பல்வேறு வகைப் பயிர்களின் கீழ் உள்ள நிலத்தின் அளவு பயிரிடுதலின் பாங்கு எனப்படும்.

- பயிரிடுதலின் பாங்கில் ஏற்படும் மாற்றம் பல்வேறு பயிர்கள் பயிரிடப்படும் நிலப்பரப்பின் வீதத்தில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும்.

**பயிரிடுதலின் வகையைப் பாதிக்கும் காரணிகள்**

**இயற்கை காரணிகள்**

- நிலத்தின் தன்மை, மண், வளம், தட்பவெப்ப நிலை, மழையளவு, மற்றும் சராசரி வெப்பநிலை ஆகும்.
- வேளாண்மையில் மனிதனின் பங்கைவிட இயற்கையின் பங்கு முக்கியம்.

**நில உடைமையின் அளவு**

நில உடைமையின் அளவு சிறியதாக இருந்தால் உழவர்கள் உணவு தானியங்கள் பயிரிடுவதை விரும்புவர். நிலத்தின் அளவு குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக இருந்தால், உழவர்கள் பணப்பயிர்களையே பயிரிடுவர்.

**வேளாண் பண்டங்களின் விலை**

உழவர்கள் தங்களுக்கு அதிக லாபம் தரும் பயிகளையே ப்யிரிட விரும்புவர்.

**வேளாண் உள்ளீடுகளின் கிடைப்பளவு**

உழவர்கள் அதிக தரம் வாய்ந்த உள்ளீடுகளைப் (இடு பொருள்கள்) பெற்றிருந்தால் பணப்பயிர்களையே பயிரிடுவர். இதற்கு, உரங்கள், இரசாயனப் பொருட்கள், உயர் விளைச்சலைத் தரும் விதைகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் ஆகியன தேவைப்படுகின்றன.

**சமூக காரணிகள்**

- சமூக பழக்க வழக்கங்கள், புதிய தொழில் நுட்ப முன்னேற்றத்தில் உழவர்களின் மனப்பான்மை முதலியன பயிரிடுதலின் வகைகளைத் தீர்மானிக்கும்.
- புதிய தொழில்நுட்ப முன்னேற்றத்தை உழவர்கள் ஏற்றுக்கொண்டால், பணப்பயிகளை பயிரிடுவதற்கு அவர்கள் முன்வருவர்.

**அரசின் கொள்கை**

- குறிப்பிட்ட பயிர்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகைகள் கூட பயிர் வகைகளைத் தீர்மானிக்கும்.

**பயிர் வகைகள் பற்றிய அறிவு**

- பயிர் வகைகள் மற்றும் பயிரிடுதலின் பாங்கு பற்றிய தெளிவான அறிவு உழவர்களுக்கு இருக்குமானால் அவர்கள் தங்கள் பயிர் வகைகள் மாற்றிட விழைவர்.

**பயிர் காப்புத் திட்டம்**

பயிர் பாதுகாப்புத் திட்டம் நாட்டின் இடர்பாடுகள் உடைய பயிர்களைப்பயிரிட/ பாதுகாக்க உதவுகிறது.

**அரசின் முயற்சிகள்**

1. உயர் விளைச்சல் தரும் விதைகளை அரசின் முகவர்கள் மூலம் பகிர்ந்தளித்தல்.
2. இரசாயன உரங்கள் சலுகை விலையில் கிடைக்கும்படி செய்தல்.
3. வேளாண் பொருட்களை இருப்பு வைக்கவும், ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்த் செல்லவும், போதுமான வசதிகளை வழங்குதல்
4. வேளாண் பொருட்களுக்கான அங்காடி அமைப்பை திறம்பட செயல்படச் செய்தல் மூலம் உழவர்களுக்கு தங்கள் பண்டங்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்தல்.

**நில உடைமை**

- நிலஉடைமையே வேளாண் உற்பத்தியின் அளவு, தரம், அமைப்பு ஆகியவற்றைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும்.
- நிலஉடைமை என்பது ஒரு உழவனுக்கு சொந்தமான மற்றும் பயிரிடும் நிலத்தின் அளவைக் குறிக்கும். இதை இரண்டு அடிப்படையில் கூறலாம்.

  1. உரிமையின் அடிப்படையில், நிலஉடைமை என்பது, ஒரு உழவனுக்கு சொந்தமான நிலத்தின் அளவு
  2. பயிரிடுதல் (சாகுபடி செய்தல்) அடிப்படையில்.

  நில உடைமை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் சாகுபடி செய்யப்படும் நிலத்தின் அளவைக் குறைக்கும்.

**நில சீர்திருத்தங்கள்**

நிலசீர்திருத்தம் என்பது நில உரிமையாளர், குத்தகைதாரர், மற்றும் நில மேலாண்மை ஆகியவற்றில் ஏற்படும் கொள்கை மாற்றத்தைக் குறிக்கும்.

**இந்தியாவில் நில சீர்திருத்தத்தின் நோக்கங்கள்**

1. சம உடைமை சமுதாய அமைப்பை அடைய வேளாண் அமைப்பை மாற்றி அமைத்தல்.
2. நில உடைமையில் சுரண்டுதலைத் தவிர்த்தல்.
3. உழவனுக்கே நிலம் சொந்தம் என்ற கொள்கையை உறுதிபடுத்துதல்
4. அடிப்படை நில அளவை (Land base) விரிவுபடுத்துதல் மூலம் கிராமப்புற ஏழை விவசாயிகளின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துதல்.
5. வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்
6. நில அமைப்பை கிராமப்புற ஏழைகளுக்கு ஏதுவாகச் செய்தல்
7. உள்ளூர் நிறுவனங்களின் மேம்பாட்டை சமப்படுத்துதல்

**இந்தியாவில் நிலசீர்திருத்த முறைகள்**

**நிலச்சீர்திருத்தத்தின் மூன்று வழிகள்**

1. அரசு சலுகைகளான, கூட்டுறவு பண்ணை மற்றும் நிலங்களை ஒருங்கிணைத்தல் மூலம் தானாக முன்வந்து ஏற்றுக் கொள்ளுதல்
2. நிலங்களை ஒருங்கிணைத்தல் போல சட்ட திருத்தங்கள் மூலமும், தாமே முன் வந்தும் நிலச் சீர்திருத்த முறைகளை ஏற்றுக் கொள்ளுதல்
3. இடைத் தரகர்களை ஒழித்தல், குத்தகைதாரர்கள் சீர்திருத்தம், நில உச்ச வரம்பு ஆகிய பல வகையான சட்டங்கள் மூலம் கட்டாயப்படுத்துதல்.

**வேளாண் அங்காடி**

- வேளாண் பொருட்களை பரிமாற்றம் செய்யப் பயன்படும் பொருளாதார செயல்பாட்டிற்கு வேளாண் அங்காடி என்று பொருள்
- இது வேளாண் பொருட்களின் மதிப்பை மணத்தால் தீர்மானிக்கிறது. இது பண்டங்களை கடைசி நுகர்வோருக்கு வழங்குகிறது.

**வேளாண் அங்காடியின் முக்கியத்துவம்**

1. தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப்பொருட்களை வழங்குகிறது.
2. மக்களுக்கு தேவையான உணவு தானியங்களையும், மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான தீனியையும் வழங்குகிறது.
3. நாட்டின் உள்நாட்டு அங்காடி விரிவடைவதற்குத் தேவையான அடிப்படை அமைப்பை வழங்குகிறது.

4. உள்நாட்டு தேவையைவிட விற்பனைக்குரிய உபரி அதிகமாக இருக்கும்பொழுது, பன்னாட்டு அங்காடி விரிவடைவதற்கும், கனிசமான அளவு அந்நியச் செலவாணியை ஈட்டவும் உதவுகிறது.

**விற்பனைக்குரிய உபரி**

- பண்ணைத் தேவைகளுக்கும், சொந்த நுகர்வுக்கும் போக எஞ்சியிருக்கும் உபரியே விற்பனைக்குரிய உபரி எனப்படும்.
- இது விற்பனைக்கு எஞ்சியிருக்கும் பகுதியைக் குறிக்கும். விற்பனைக்குரிய உபரி என்பது திணிக்கப்பட்டதோ, செயற்கையானதோ அல்ல, நுகர்வு போக தானாக எஞ்சியது. இது வேளாண்மை முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாது, நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கிறது.
- இது வேளாண்மை துறையில் உற்பத்தி செய்யப்பட்ட உண்மை உபரியாகும். இதை கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.(பழைய இருப்பு+ நடப்பு உற்பத்தி)-(நுகர்வு + சேதாரம்+அடுத்த பருவகாலத்திற்கான விதைகள்)
- விற்பனைக்குரிய உபரி என்பது வேளாண்மையின் மொத்த உபரியாகும். விற்பனை செய்யப்பட்ட உபரி என்பது வேளாண்மையின் நிகர உபரியாகும்.

**விற்பனைக்குரிய உபரியைத் தீர்மானிக்கும் காரணிகள்**

1. நில உடைமையில் அளவு
2. பயிர் உற்பத்தி
3. குடும்ப அளவு
4. பிற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்
5. திறமையான அங்காடி அமைப்பைப் பொருத்தும் அமையும்.

**விற்பனைக்குரிய உபரியின் முக்கியத்துவம்**

- விற்பனைக்குரிய உபரியை அதிகரித்தல் என்பது உண்மை உபரி ஆகும். இது உண்மை வருமானம், உண்மை சேமிப்பு, உண்மை மூலதன திரட்சி, உண்மை முதலீடு ஆகியவற்றை தீர்மானிக்கும்.
- இது பணவீக்கமற்ற பொருளாதார நலனை உயர்த்தும்.
- உண்மை விற்பனைக்குரிய உபரியில் ஏற்படும் சரிவு, குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளில், உணவுப் பண்டங்களின் விலையை மட்டுமல்லாது, கூலிப் பண்டங்களின் விலையையும் உயர்த்தும். மேலும் உழைப்பாளர்களின் உண்மை வாழ்க்கைத்தரம் குறையும்.

**இந்தியாவில் உணவுப் பிரச்சினையின் தன்மை**

உலகில் மக்கள்தொகை அளவில் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அதனால், உணவுப் பொருட்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

**இந்தியாவில் உணவு உற்பத்தி பற்றிய பிரச்சினையின் 4 கூறுகள்**

1. **அளவு சார்ந்தவை**
   - உணவுப் பிரச்சினையானது, உணவு தானியங்களின் தேவை, அளிப்பை சார்ந்ததாகும். நீண்ட காலமாக, உணவு தானியங்களின் உற்பத்தியானது, தேவையை விடக் குறைவாகும்.

2. **தரம் சார்ந்தவை**
   - உணவுப் பிரச்சினையானது உணவிலுள்ள சத்தின் தன்மையை (கலோரிகளை)(nutritive element) அடிப்படையாகக் கொண்டது. வைட்டமின்கள், மினரல்கள், கார்போஹைர்ரேட்டுகள் போன்றவை சரிவிகித உணவில் அடங்கியுள்ள மூலக்கூறுகள் ஆகும். ஆனால் இம்மூலக்கூறுகள் போதுமான அளவில் பெரும்பாலான இந்திய மக்களுக்கு கிடைப்பதில்லை.
   - ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு 3000 கலோரிகள் தேவைப்படுகிறது. ஆனால் சராசரியாக இந்திய மக்களுக்கு 2100 கலோரிகளஏ கிடைக்கின்றது. இந்தியாவில் நிலவும் வறுமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

3. **பகிர்வு சார்ந்தவை**
   - உணவுப் பிரச்சினையானது, வேளாண் பொருட்களின் அங்காடி அமைப்பைச் சார்ந்ததாகும்.
   - பகிர்விலுள்ள குறைபாடுகள் காரணமாக, பெருவாரியான மக்களுக்கு, போதுமான அளவு உணவு தானியங்கள் குறிப்பிட்ட நேரத்தில், நியாய விலையில் கிடைப்பதில்லை.
   - சமூக விரோத சக்திகள், அங்காடியில், உணவுப் பண்டங்களுக்கு செயற்கை பற்றாக்குறையை ஏற்படுத்தி, நியாயமற்ற விலைக்கு விற்கின்றனர்.

4. **பொருளாதாரம் சார்ந்தவை**
   - உணவுப் பிரச்சினை என்பது மக்களின் வாங்கும்சக்தியைச் சார்ந்ததாகும்.

**உணவுப் பிரச்சினைக்கான காரணங்கள்**

- வேகமான மக்கள்தொகை வளர்ச்சி
- குறைவான வேளாண் உற்பத்தி திறன்
- இயற்கைச் சீற்றங்கள்
- பணப் பயிர்களின் வளர்ச்சி
- நுகர்வுத் தனிமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
- உணவிற்கான வருமானத் தேவையில் ஏற்பட்டுள்ள உயர்வு
- பொருளாதார முன்னேற்றமும், நகரமயமாதலும்
- பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை

**இந்திய அரசின் உணவுக் கொள்கை**

1. உணவு தானிய உற்பத்தியை அதிகரித்தல்
2. உணவு தானியங்கள் இறக்குமதி
3. உணவு தானியங்களை கொள்முதல் செய்தல்

**உணவுப் பண்டக்களின் பொதுப் பங்கீட்டு முறை**

- உணவுப் பொருட்களை கட்டுப்படுத்தப்பட்ட விலையில் நியாயமான பங்கீடு கிடைக்க அரசு பொதுப் பங்கீட்டு முறையை செயல்படுத்தியது.
- இம்முறையின் படி நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன. இத்தகைய கடைகள் ஒவ்வொன்றும் 2000 மக்களுக்கு பணியாற்றும்படி அமைக்கப்பட்டன.
- இக்கடைகள் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை குறிப்பிட்ட அளவில், கட்டுப்படுத்தப்பட்ட விலையில் மக்களுக்கு வழங்குகின்றன.

**தாங்கியிருப்பு திட்டம் (Buffer Stock Sheme)**

- ஆண்டு முழுவதும் முக்கியமான உணவு தானியங்களின் அளிப்பு (வழங்கல்) சீராக இருப்பதை உறுதிசெய்ய அரசு ஒரு திட்டத்தை தொடங்கியது.
- எப்பொழுதெல்லாம் அவற்றின் விலை உயர்கிறதோ அப்பொழுதெல்லாம் விலையை நிலைநிறுத்துவதற்காக அரசு உணவு தானியங்களை தாங்கியிருப்பிலிருந்து வெளியிடுகிறது.

**குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் ஏற்படுத்துதல்**

வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், முறையான அளிப்பை உறுதிப்படுத்துவதற்கும், உணவு தானியங்களின் நியாயமான பங்கீட்டிற்கும்,

தேசிய வித கழகம், வேளண் தொழிற்கழகம், வேளாண் விலை குழு, இந்திய உணவு கழகம், இந்திய உரக் கழகம் என அரசு சில குறிப்பிடத்தக்க நிறுவனங்களை ஏற்படுத்தியது.

**வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம்**

- வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஊக்கப்படுத்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. வேளாண்மை பல்கலைக்கழகங்களும், இந்திய வேளாண்மை ஆரய்ச்சி வாரியம் (ICAR) ஆகியவற்றையும் அரசு ஏற்படுத்தியது.

**பொதுப் பங்கீடுத் துறை(PDS)**

- அவசியமான உணவுப் பண்டங்களை சீரான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் மக்களுக்கு பகிர்வு செய்வதே பொதுப் பங்கீட்டு முறை எனப்படும்.
- இம்முறையின்படி அவசியமான நுகர்வுப் பொருட்களை குரிப்பிட்ட விலையில் அரசின் முகவர்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்படுகிறது.

**பொதுப் பங்கீட்டு முறையின் முக்கிய நோக்கங்கள்**

1. நியாய விலைக் கடைகள் (Fair Price Shops(FPS) or Ration Shops)
2. நுகர்வொர் கூட்டுறவு சங்கங்கள்
3. கட்டுப்படுத்தப்பட்ட மலிவு விலை துணிக் கடைகள்
4. சிறப்பு அங்காடி அன்றாட தேவைக்கான பொருட்களை கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கும் அங்காடிக்கு கிறப்பு அங்காடி என்று வெயர்.
5. மண்ணெண்ணெய் சில்லறை விற்வனையாளர்கள்

**பண்டங்களின் பகிர்வு**

கோதுமை, அரிசி, சர்க்கரை, இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்கள், மண்ணெண்ணெய், மென்மைக்கரி முதலிய 6 வகையான இன்றியமையாப் பண்டங்கள் பொதுப் பங்கீட்டு முறை வாயிலாக வழங்கப்படுகின்றன.

**பண்டங்களை வழங்குவதில் பொறுப்பு**

பல்வேஉ வகையான நிறுவனங்களுக்கு, கொள்முதல் செய்தல், ஒதுக்கீடு செய்தல், பகிர்வு செய்தல் முதலியவற்றிற்கு வெவ்வேறு பொறுப்புகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

- கோதுமை, அரிசி, ஏனைய உணவு தானியங்களுக்கு இந்திய உணவுக் கழகம்

- மண்ணெண்ணெய்- இந்திய எண்ணெய் கழகம் மற்றும் பெட்ரோலிய அமைச்சகம்
- மென்மைக் கரி - இந்திய நிலக்கரி லிமிடெட்
- தேசிய நெசவுத் தொழில் கழகம்
- சமையல் எண்ணெய்- மாநில வாணிப கழகம்

**வேளாண் விலைக் கொள்கை**

வேளாண்மைப் பொருட்களின் விலையை, நிர்ணயித்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை வேளாண் விலைக் கொள்கை எனப்படும்.

**வேளாண் விலைக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்**

1. வேளாண் பண்டங்களுக்கான விலையை நிர்ணயித்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்
2. விலையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை தவிர்த்தல்
3. வேளாண் பண்டங்களுக்கான நியாய விலை, உழவர்களுக்கு கிடைக்க செய்தல்
4. நல்ல தரமான பண்டங்களை ஏற்றுக் கொள்ளத் தக்க விலையில் மக்களுக்கு வழங்குதல்
5. உணவு தானியங்கள் மற்றும் உணவு தானியங்க அல்லாத பொருட்களின் விலைகளுக்கிடையே நல்ல தொடர்பை நிலைப்படுத்துதல்
6. வெவ்வேறு மாநிலங்களுக்கிடையே விலைகளை ஒருங்கிணைத்தல்.

**அரசின் விலைக் கொள்கைகள்**

1. **குறைந்த ஆதரவு விலைகள்**

- விதைக்கும் பருவகாலத்தின் தொடக்கத்தில் ஒவ்வொரு முக்கிய வேளாண் பண்டங்களுக்கும் குறைந்த ஆதரவு விலையை அரசு அறிவிக்கும்
- வேளாண் பண்டங்களின் விலையானது ஒரு குறிப்பிட்ட அளவிர்குக் கீழ் (இறங்காது) குறையாது என்ற உறுதியை உழவர்களுக்கு இது வழங்குகிறது.
- உற்பத்தியை தொடர்ந்து செய்யவும், விரிவுபடுத்தவும் இவ்விலையானது உழவர்களுக்கு உறுதியையயிம் ஊக்கத்தையும் வழங்குகிறது.

2. **கொள்முதல் விலை**

- இது பயிர் அறுவடை காலத்தில் அரசு அறிவிக்கும் விலையாகும். இவ்விலையானது இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டது.

1. குறிப்பிட்ட அளவிற்கு கீழ் விலை குறையாது என்ற உறுதியை இது உழவர்களுக்கு வழங்குகிறது. அங்காடி விலையானது, கொள்முதல் விலைக்கும் கீழ் குறையுமானால் தங்கள் பண்டங்களை அரசுக்கு விற்றுவிடலாம்.

2. பொது பங்கீட்டு முறைக்கும், தாங்கிருப்புக்கும் (buffer stock) தேவையான பண்டங்களை கொள்முதல் செய்ய அரசுக்கு இது உதவுகிறது.

- வேளாண் செலவு மற்றும் விலைகள் குகழுவின்(Commission for Agricultural Costand Prices- CACP) பரிந்துரையின்படி அரசால் இவ்விலை அறிவிக்கப்படுகிறது.
- கோதுமை மற்றும் அரிசியை கொள்முதல் செய்ய விவ்விலையை பெருவாரியாக அரசு பயன்படுத்துகிறது. பொதுவாக குறைந்த ஆதரவு விலையைவிட கொள்முதல் விலை உயர்வாக இருக்கும்.

**3. வழங்கல் விலை (Issue Prices)**

- மாநில மற்றும் யூனியன்பிரதேசங்களுக்கு உணவு தானியங்கள் அளிப்பு மற்றும் ஒதுக்கிட்டிற்காக இந்திய உணவுக் கழகத்தால் அறிவிக்கப்படும் விலை வழங்கல் விலையாகும்.
- இவ்விலை பொதுப்பங்கீட்டு முறைக்கான தேவையை பூர்த்தி செய்கிறது.
- நியாயவிலை கடைகளின் மூலம் வழங்கப்படும் பொருட்களின் விலையானது வழங்கல் விலையை சார்ந்திருக்கும்.
- வழங்கல் விலையானது, அங்காடி விலையைவிட குறைவாகவும், கொள்முதல் விலையைவிட அதிகமாகவும் இருக்கும்.

**4. சில்லரை விலை**

நியாய விலைக் கடைகள் மூலமாக மொதுப் பங்கீட்டு முறை செயல்படுகிறது. அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில், அடிப்படை நுகர்வுப் பண்டங்களை நியாய விலைக்கடைகள் மக்களுக்கு வழங்கும். இவ்விலைக்கு சில்லரை விலை என்று பெயர். இவ்விலை வழங்கல் விலையை விட அதிகமாக இருக்கும்.

**5. தாங்கிருப்பு நடவடிக்கைகள்**

- அரசால் உணவு இருப்பை வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதைக்குறிப்பதாகும்
- இந்த நடவடிக்கைகள் 2 நோக்கங்களைக் கொண்டது

1. குறிப்பிடத்தக்க அளவில் விலை ஏற்றத் தாழ்வுகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்.

2. அரசு உணவு தானியங்களை கொள்முதல் செய்ய உதவுகிறது எனவே உணவு தானியங்கள் இருப்பு நாடு முழுவதும் ஆண்டு முழுவதும் ஒரே சீராக இருப்பதை உறுதி செய்கிறது.

- இந்நடவடிக்கைகள் இந்திய உணவு கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது எப்போதெல்லாம் உணவு தானிய இருப்பின் விலை வீழ்ச்சி அடைகிறதோ அப்பொழுது இந்திய உணவு கழகம் கொள்முதல் விலையில் அவற்றை வாங்குகிறது. மேலும் எப்பொழுதெல்லாம் விலை உயர்கிறதோ அப்பொழுது இந்திய உணவு கழகம் அவற்றை விற்பனை செய்ய முற்படுகிறது. இவ்வாறு தாங்கிருப்பு நடவடிக்கைகள் வேளாண் பெருட்களின் விலையை நிலைப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது.

**வேளாண்மை உற்பத்தி**

- வேளாண்மை உள்ளீடுகளுக்கும் மற்றும் வெளியீடுகளுக்கும் இடையே உள்ள விகிதத்தை குறிக்கும்.
- வேளாண்மை உற்பத்தி = மொத்த உற்பத்தி / வேலைக்கு அமர்த்தப்பட்ட உள்ளீடுகளின் அளவு
- நிலத்தின் உற்பத்தி திறன் = மொத்த உற்பத்தி /நிலத்தின் பரப்பளவு
- உழைப்பின் உற்பத்தி திறன் = மொத்த உற்பத்தி / வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை
- மூலதனத்தின் உற்பத்தி திறன் = மொத்த உற்பத்தி / மொத்த முதலீட்டு அளவு

**இந்தியாவில் வேளாண்மை உற்பத்தியின் போக்கு**

1. **நிலத்தின் உற்பத்தி திறன்**: பிற நாடுகளின் சராசரி நிலத்தின் உற்பத்தி திறனை ஒப்பிட்டும் போது இந்தியாவில் நிலத்தின் உற்பத்தி திறன் மிகவும் குறைவாக உள்ளது.

2. **ஒரு தொழிலாளரின் உற்பத்தி திறன்**

தொழில் மற்றும் இதர துறைகளோடு ஒப்பிடும் போது வேளாண்மையில் உள்ள ஒரு தொழிலாளரின் உற்பத்தி திறன் மிகவும் குறைவாக உள்ளது.

கணக்கீட்டின்படி பேரளவு தொழில் உற்பத்தியில் உள்ளவரோடு ஒப்பிடும் போது வேளாண்மையில் உள்ள உற்பத்தித் தொழிலாளரின் உற்பத்தி திறனானது மூன்றில்

ஒரு பங்கே ஆகும். அதே நேரத்தில் சிறுதொழிலில் உள்ளவரோடு ஒப்பிடும்போது இரண்டில் ஒரு பங்கு ஆகும்.